27

வாழ்க்கைக் காட்சி

களத்துமேட்டு மாமரத்தடியில் கயிற்றுக் கட்டில் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். இலைகளின் இடைவெளிகளின் மூலம் மேலே விழுந்த வெயில் அவ்வளவாக உறைக்கவில்லை. தை பிறந்து பத்துத் தேதிகளாயிருந்தன. குளிர் காற்று மத்தியானங்கூடக் கொல்லிமலையி லிருந்து ஜில்லென்று வந்தது.

வயலில் ஆட்கள் அறுப்பு அறுத்துக் கொண்டிருந்தார்கள். தங்க வர்ணத்துடன் தலைதூக்கி மஞ்சள் பாம்புகள் போலப் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தன நெற்பயிர்கள். ஆறுமுகம் அவர்களுடன் இடுப்புக் கோவணமும் தலையில் சுற்றிய துணியுமாக அறுப்பில் மும்முரமாக இருந்தான். குழந்தையை மாமரக்கிளையில் தூளிபோட்டுத் தூங்கவைத்துவிட்டு வள்ளியம்மை கட்டுக் கட்டிக் கொண்டிருந்தாள். இளமையால் பூரித்து விரிந்திருந்த அவளுடைய முதுகு வெயிலில் வியர்வையுடன் பளபளவென்று இருந்தது.

சடையனும் பூவாயியும் ஒரு மரத்தடியில் இளைப்பாறிப் புகையிலை போட்டுத் துப்பிக் கொண்டிருந்தார்கள்.

நான்கு வருஷங்களுக்கு முன்னால் நான் சென்னையில் படித்துவந்த சமயம். என் தாயுடன் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தேன். சட்ட கலாசாலைக்குப் பிரிதிதினமும் திருவல்லிக்கேணியிலிருந்து மோட்டார் பஸ்ஸில் தான் 'டவுனு'க்குப் போவது வழக்கம்.

தீபாவளிக்கு முதல்நாள் சாயந்தரம் ஆறுமணி. தேவையான கதர்த் துணிகளைக் காதிபந்தரில் வாங்கிக் கொண்டு பூக்கடை பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டிருந்தேன். வெகுநேரம் அங்கே நிற்க வேண்டியதாயிற்று. வந்த பஸ்களெல்லாம் நிறைந்து வந்தன.

மேலே வானம் கறுத்து எந்த நிமிஷம் மழை வருமோ என்று இருந்தது. பக்கத்தில் ரோட்டின் ஓரத்திலிருந்த மேடைமேல், வீடற்ற ஏழைகள் ஈசல்கள்போல நிறைந்திருந்தார்கள். மழை வந்தால் அந்த

கலைமகள், டிசம்பர்-1938

அநாதைகள் என்ன செய்வார்கள் என்று யோசித்தவாறு நின்று கொண்டிருந்தேன்.

இரவும் பகலும் அவர்கள் அங்கேதான் வாசம் செய்வார்கள். ரோட்டின் எல்லையாக இருக்கும் அந்தச் சுவரோரத்தில் கல்களை வைத்து ஏதாவது கிடைத்ததைச் சமைத்துச் சாப்பிடுவார்கள்; கிடைக்காவிட்டால் மரத் தடியிலோ வானத்தடியிலோ படுத்துக்கொண்டு விடுவார்கள்; பஸ் பிரயாணிகள் கொடுக்கும் சில்லறைக்கு ஆப்பமோ, தோசையோ வாங்கிச் சாப்பிடுவார்கள். கிழிந்து சிக்குப்பிடித்த உடைகள் அவர்கள் உடலைப் பொத்திக் கொண்டிருக்கும். வறுமையின் கொடுமை அதற்கு மேல் அவர்களை என்ன செய்ய முடியும்? மானத்தைக் கூட இழக்கும் தறுவாயில் அவர்களை வைத்துப் பிறகு என்னதான் செய்யக்கூடும்? அந்த வெறும் நிர்க்கதியில் அவர்களுக்கு ஒரு கோரமான சிரிப்பும் சந்தோஷமும் இருந்தன. கேலி பேசுவார்கள்; வம்பளப்பார்கள்; ஒருவருக்கொருவர் சிக்குத் தலையில் பேன் பார்த்துச் சொடுக்குவார்கள். அசங்கியமான வார்த்தைகளும் செய்கைகளும் அவர்களுக்குக் கொஞ்சங் கூடச் சிரமமாக இல்லை.

பஸ்ஸிற்குக் காத்துக்கொண்டிருந்ததால் கொஞ்ச நேரம் அந்தப் பக்கம் திரும்பி அந்தச் சாவுமுகங்களைப் பார்த்தேன். மங்கிய ஒளியில் திடீரென்று ஒரு முகம் எங்கேயோ பார்ததுபோலக் கண்ணில் பட்டது. ஆனால் அந்த நிமிஷம் ஒரு பஸ் வந்ததால் திரும்பி அதன் பக்கம் ஓடினேன். அதிலும் இடமில்லையென்று அறிந்து ஆத்திரத்துடன் பின்வாங்கும்பொழுது ஒரு குரல் காதில் பட்டது.

'சின்னச்சாமி, ஆத்தா!' என்று ஒரு பெண் கத்தினாள்.

'எங்கேடி?' என்று ஒரு நடு வயசு ஸ்திரீ தலை நீட்டினாள்.

'ஆயா! இந்தப் பாரு!' என்று அவள் கத்தினாள்.

'என்னாது?' என்று சொல்லிக்கொண்டு எங்களூர் சடையன் வந்தான்.

என்னைக் கண்டவுடன் அவன் பேச்சற்றுப் போய் அப்படியே நின்றுவிட்டான். பூவாயி தன் கிழிந்த புடைவையைச் சரிப்படுத்திக் கொண்டு, 'ராசா!' என்று அலறினவண்ணம் என் காலடியில் வந்து உட்கார்ந்துவிட்டாள். வள்ளியம்மை விடாமல் என்னைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

என் திக்பிரமையிலிருந்து நான் மீண்டு மறுபடியும் பேசுவதற்குக் கொஞ்சம் நாழிகையாகிவிட்டது.

'என்ன சடையா? இதென்ன?' என்றேன்.

அவனால் பேச முடியவில்லை. கண்ணிலிருந்து ஜலம் கொட்டிற்று. பூவாயி கொஞ்சம் சமாளித்துக் கொண்டாள்.

'நாங்கள் ஒன்னை எடுத்து வளத்தமெ! - எங்களை நீ ஒதச்சுத் தள்ளிட்டாயே! ஊர்லே பொளப்பில்லே. ஒன்காலிலே உளலாமினு,

பட்டணத்துக்கு வந்தோம். நீ எங்கிட்டு இருக்கேன்னு தெரியலே. மூணு மாசமாச்சு, ராவுப் பட்டினி, பவல் பட்டினி. இது ஒனக்கு அடுக்குமா? பெரியய்யா இருந்தா இப்படி என்னைத் தவிக்க வுடுவாரா?' என்று ஒரே மூச்சில் சொல்லி அழுதாள்.

என் தலை கிர்ரென்று சுற்றிற்று. சட்டென்று 'பஸ் இங்கே நிற்கும்' என்ற போர்டைப் பிடித்துக் கொண்டேன்.

நான் பட்டணத்துக்குப் படிக்க வந்தபொழுது கிராமத்திலிருந்த நிலங்களையெல்லாம் மொத்தமாக ஐந்து வருஷங்களுக்கு ரொக்கக் குத்தகை பேசி ஒரு பெரிய மனிதரிடம் ஒப்படைத்துவிட்டு வந்தேன். சடையனும் அவன் தகப்பனும் எங்கள் குடும்பத்தில் வெகுகாலமாக இருந்து எங்கள் நிலங்களைச் சாகுபடி செய்தவர்கள். வீட்டில், அதிலும் என் தகப்பனார் போனபிறகு, சடையன்தான் அதிகாரி. 'அம்மா! அப்படிச் செய்யாதே!' என்று என் தாயைக்கூட உத்தரவிடுவான். 'அந்த மேட்டை இந்த வருஷம் எடுத்தாகணும். பத்துக் கலம் செலவாகும்' என்று சொல்லிவிட்டு அவன் பாட்டிற்கு வேலை செய்துவிடுவான். 'இந்த வாட்டி', கிணறு தூரு வாராட்டி ஒரு மணி நெல் வராது' என்று பத்துக் கலம் அதற்குச் செலவழிப்பான்.

நான் மைனர்; என் தாயோ உலகம் தெரியாதவள். கிராமத்தில் எல்லோரும் எங்களைக் கண்டு அனுதாபப்பட்டார்கள். கணக்குப்பிள்ளை என் தாயிடம் வந்து, 'அம்மா! அந்தச் சடையனுக்கு ஏன் இவ்வளவு இடங்கொடுத்துச் சொத்து நஷ்டப்படுகிறீர்கள்? நான் ஒரு சரியான பேர்வழியைப் பிடித்துத் தருகிறேன். மொத்தமாக ஒருவரிடத்தில் நிலங்கள் பூராவையும் ஒப்படைத்துவிட்டால் கவலையே இல்லை' என்று சொன்னார். தாய் அந்த யோசனைக்குச் சம்மதித்து என் கார்டிய னாகத் தஸ்தாவேஜு எழுதி முடித்தாள். சடையன் நிலத்திலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று.

அப்பொழுது வள்ளியம்மைக்கு வயசு பதினான்குதான். அவளுடைய கருமையான முகத்தில் கண்களும் பற்களுந்தான் பளிச்சென்று வெண்மை யாக இருக்கும். தலைமயிர் பரட்டையாக இருக்கும். எப்பொழுது பார்த்தாலும் வயலில்தான் இருப்பாள். சோளப்பயிர் பூமியில் இருக்கும் பொழுது அதற்குக் காவல் அவள்தான். எனக்கு நன்றாக ஞாபகம் இருந்தது: வள்ளி என்றால் வள்ளிதான்.

சடையன் கதையைச் சொன்னான். நாங்கள் அவனை நிலத்தை விட்டுப் போகச் சொன்ன பிறகு அவனுக்கு ஊரில் பிழைப்புக்கு வழியில்லாமல் போய்விட்டதாம். 'கெட்டும் பட்டணம் சேர்' என்கிற பழமொழியைக் கேட்டிருக்கிறான்; பாவம்! அவ்வளவு பெரிய ஊரில் எப்படியாவது கூலிவேலை செய்து பிழைத்துவிடலாமென்று சென்னைக்கு வந்தான், பெண்சாதி பெண்ணுடன். ஆனால் வந்த சில

நாட்களுக்குள்ளேயே பட்டணத்தில் பட்டினி இருக்கத்தான் முடியும், வேறு வழியில்லை என்று கண்டுவிட்டான். என்னைத் தேட முயன்றிருக்கிறான். ஆனால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? எல்லோரையும் போலக் கடைசியாக விதியின்றிப் பூக்கடை ரோட்டிலுள்ள ஒரு மேடையைச் சரணமடைந்துவிட்டான்.

தீபாவளிக்கு முதல் நாள் ஆதலால், தெருவில் வண்டிகளும் ஜனங்களுமாகப் பெருத்த கூட்டம்; மோட்டார்களின் ஹாரன்கள் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தன. மின்சார விளக்கின் வெளிச்சத்தில் சடையனின் முகத்தைப் பார்த்தேன். தாடி மீசை வளர்ந்து, வயிறொட்டித் தள்ளாடினவன்போல நின்றான். பூவாயி என்னைக் கண்டுவிட்டதால் ஏற்பட்ட சந்தோஷம், அதுவரை தான் அநுபவித்ததால் ஏற்பட்ட துக்கம் இவை இரண்டாலும் பீடிக்கப்பட்டவளாய்த் தத்தளித்துக் கொண்டிருந்தாள். 'இனிமேல் மான ஹானி இல்லை. இனிமேல் பிழைத்து விடுவோம்' என்ற எண்ணத்தின் தெளிவு அவள் முகத்தில் தென்பட்டது.

அதைக் கண்டு நான் என்னையே மறந்து அப்படியே நின்றேன். அந்த மகத்தான விசுவாஸத்தின் பெருக்கு என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. எதிரே தோன்றின எல்லாம் கனவுத் தோற்றங்கள் போல இருந்தன. பஸ்கள் வந்து வந்து நின்றுவிட்டுப் போய்க்கொண்டிருந்தன.

'சடையா! நீ ஏன் பட்டணம் வந்தாய்? அங்கேயே இருந்து கொண்டு எப்படியாவது பிழைக்கக்கூடாதா?' என்றேன்.

'தெரியல்லே சாமி! உங்க ஊடு எனக்குச் சோறு போட்டு வளத்து என்னை வயக்காட்டுலே ஊணிப்புடிச்சே! அதிலிருந்து புடுங்கி எறிஞ்சிங்க. பயிராட்டமா வாடிப்போனேன்'.

'திரும்பவும் நட்டுப்பிடறேன். சடையா, ஊருக்குப் போறயா?'

'கஞ்சிவாத்திங்களானா புள்ளெ குட்டியோடே நல்லாயிருப்பீங்க?' என்றான் சடையன்.

வள்ளியம்மை எங்கேயோ பார்ப்பவள்போல நின்றாள். அவள் கண்ணீர் மின்சார விளக்கின் வெளிச்சத்தில் பளிச்சென்று தெரிந்தது.

'என்னெப் பெத்த ராசா நீ கைவிட மாட்டேன்னு தெரியுமே எனக்கு!' என்றாள் பூவாயி.

தூளியில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது.

வள்ளியம்மையின் புருஷன் ஆறுமுகம், 'இந்தா, காது கேக்கல்லே, புள்ளே அளுவறது?' என்று அதட்டினான்.

'நீ தான் செத்தெப்போய் எடேன்!' என்று தலை நிமிர்ந்து வள்ளியம்மை தன் புருஷனை உத்தரவிட்டாள்.

அப்பொழுது நான் கவனித்துக்கொண்டிருந்ததை அவள் பார்த்து விட்டாள். வெட்கிப்போனாள். நான் பக்கென்று சிரித்துவிட்டேன்.

உடனே அவள் கொஞ்சலாகச் சிரித்துக்கொண்டு தூளியிலிருந்த குழந்தையை எடுக்க வந்தாள்.

'என்னாடி?' என்று கேட்டுக் கொண்டு பூவாயி வந்தாள்.

'ஒன்னுமில்லே போ!' என்று புருவத்தை நெறித்துக் கொண்டு வள்ளியம்மை சீறி விழுந்தாள், பொய் கோபத்துடன்.

என் முகத்தைப் பார்த்துப் பூவாயியும் நடந்ததை அறிந்து கொண்டாள். அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

'என் ராசா! என் வவுத்துலே நீ வாத்த பாலு! இன்னிக்குச் சிரிக்கறம்' என்றாள்.

நான் அப்படியே புல்லரித்துப் போனவனாய் உட்கார்ந்திருந்தேன்.

வள்ளியம்மை குழந்தையை எடுத்துக்கொண்டு மரத்தடி மறைவிற்குச் சென்றாள்.

●